MAY 2022 **P/ID 35312/PTL1B**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. ஆண்டாளின் பிறப்பு குறித்து எழுதுக.

2. பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. நாச்சியார் திருமொழியின் பாடுபொருளைச் சுட்டுக.

4. "மன்னு புகழ் கௌசலை தன் மணிவயிறு வாய்த்தவனே" -என்னும் பாடலின் பொருளுரைக்க.

5. வைணவ அடியவர்களின் செயல்களாக குலசேகர ஆழ்வார் கூறுவன யாவை?

6. முத்திக் கலப்புரைத்தல் என்றால் என்ன?

7. பிடித்த பத்து - பெயர்க் காரணம் கூறுக.

8. பதிகம் என்றால் என்ன?

9. திருஞான சம்பந்தர் ஞானப்பால் உண்டதைக் குறிப்பிடுக.

10. காரைக்கால் அம்மையாரின் வரலாற்றைச் சுருக்கி வரைக.

11. காரைக்கால் அம்மையார் தம் நெஞ்சினை முன்னிறுத்திப் பாடிய பாடலின் பொருள் தருக.

12. அற்புதத் திருவந்தாதியின் வழி அறியலாகும் சாத்திரக் கூறுகள் யாவை?

பகுதி ஆ — (5×6 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. ஆண்டாள் குயிலிடம் வேண்டுவதென்ன விளக்குக.

14. நாச்சியார் திருமொழியில் காணலாகும் திருமாலின் பெருமைகளை எடுத்துரைக்க.

15. இராமனின் அருஞ்செயல்களாக குலசேகர ஆழ்வார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

16. அரங்கனை நினைத்து குலசேகர ஆழ்வார் ஏக்கம் கொள்ளக் காரணம் என்ன? விளக்குக.

17. ஈசனின் சிறப்புக்களை மாணிக்கவாசகர் வழி நின்று விளம்புக.

18. சம்பந்தர் தேவாரத்தில் காணப்பெறும் சிவனின் தோற்றச் சிறப்பை எடுத்துரைக்க.

19. அற்புதத் திருவந்தாதியில் இயற்கைப் பொருள்கள் வழங்கும் இறைக்காட்சியைப் புலப்படுத்துக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே
500 சொற்களில் விடை எழுதுக.

20. நாச்சியார் திருமொழி ஆண்டாளின் மன உணர்வினை வெளிப்படுத்தும் பக்திப் பேழை என்பதைச் சான்றுடன் நிறுவுக.

21. குலசேகர ஆழ்வாரின் பாசுரங்கள் பக்திச்சுவை மிக்கது என்பதை விவரிக்க.

22. திருவாசகத்தின் சிறப்பியல்புகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்கியுரைக்க.

23. ஞானசம்பந்தர் பாடலில் இடம்பெற்றுள்ள தொன்மக் கூறுகளை விரித்துரைக்க.

24. காரைக்கால் அம்மையாரின் கவிச்சிறப்பை அற்புதத் திருவந்தாதியின் வழி நின்று விளக்குக.

———————